முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.247/2022

தேதி : 12-03-2026

(வா.சா.1) – திருமதி.மஞ்சுளா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A., படித்துள்ளேன். என் கணவர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் ரெடிமேட் துணிக்கடை வைத்துள்ளார். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் இல்லத்தரசி மற்றும் வீட்டு மாடியை வாடகைக்கு விட்டுள்ளேன். என் பெயரில் எத்தனை சொத்து உள்ளது என்றால் ஒரு இடம் உள்ளது. அது எங்குள்ளது என்றால் திண்டுக்கல் மெயின் ரோட்டில் உள்ளது. காலியிடமா என்றால் ஆமாம். தனிப்பட்ட முறையில் எனக்கு வருமானம் இல்லை என்றால் வீட்டை வாடகைக்கு விட்டுள்ளதால் அதன்மூலம் வருமானம் வரும். என் கணவர் பெயரில் என்ன சொத்து உள்ளது என்றால் வீடு, ஒட்டன்சத்திரத்தில் ஒரு கட்டிடம் உள்ளது. எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் SBI, IOBல் உள்ளது. மேற்படி வங்கி கணக்கில் பண பரிவர்த்தனை நடக்கிறதா என்றால் நடக்கிறது. 1ம் பிரதிவாதிக்கு வயது சுமார் 90 இருக்கும் என்றால் சரிதான். அவரால் நடக்க முடியாத சூழ்நிலையில் தான் இருந்தார் என்றால் கடைசியாக அப்படி தான் இருந்தார், ஆனால் என்னிடம் பணம் வாங்கும்போது நல்ல நிலையில் தான் இருந்தார். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் காலம் கோவிட் காலம் என்றால் ஜனவரி 2022ல் தான் பணம் கொடுத்தேன்.

2. எங்கள் வீட்டில் கண்காணிப்பு கேமரா உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் 1ம் பிரதிவாதி பணம் வாங்கியதாக சொல்லும் காலத்தில் அவர் நடக்க முடியாத நிலையிலும், கோவிட் காலம் என்பதால் வெளியில் நடமாட முடியாமலும் இருந்தார் என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும், எந்த புரோநோட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, அவர் IP தாக்கல் செய்துள்ளார், அதில் முதல் நபராக என்னை

காட்டியுள்ளார். அவருடைய சொத்தை 2ம் பிரதிவாதியின் பெயரில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான், ஆனால் நான் ஜனவரி மாதம் பணம் கொடுத்தேன், அடுத்த மாதமே அவர் மகள் பெயரில் சொத்தை எழுதி வைத்துவிட்டார், அது தெரிந்தவுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டேன். 2ம்பிரதி வாதியின் அந்த சொத்தின் அனுபவத்தில் உள்ளார் என்றால் தெரியாது, ஆனால் அவர் 3ம் நபருக்கு 10வது மாதத்திலேயே கிரையம் செய்து கொடுத்துவிட்டதாக கேள்விபட்டேன். 1ம் பிரதிவாதி எத்தனை ஆண்டாக பழக்கம் என்றால் சுமார் 25 ஆண்டுகள். 1ம் பிரதிவாதி Spoken Eng, அபாகஸ் வகுப்பு நடத்தி வந்தார் என்றால் சரிதான். அவர் சீட்டு பிடித்தம் செய்து வந்தார் என்றால் 10 ஆண்டுக்கு முன்பு நடத்தி வந்தார், நான் பணம் கொடுத்த காலத்தில் நடத்தி வந்தாரா என்று தெரியாது.

3. 10 ஆண்டுக்கு முன்பு போட்ட சீட்டில் பணம் பற்றி எழுதி கொடுப்பார் என்றால் சரிதான். நான் சொல்கின்ற தேதியில் எந்த பண பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்றும், பணம் கொடுப்பதற்கு என்னிடம் போதிய வசதியும் இல்லை என்றால் சரியல்ல. பணம் கொடுத்ததாக சொல்லும் காலத்தில் 1ம் பிரதிவாதி எப்போது எங்கள் வீட்டிற்கு வந்தார் என்றால் மாலை சுமார் 4 மணி இருக்கும் (பணம் கொடுக்கும் சமயத்தில் அவருக்கு 85 வயதிருக்கும், நல்ல நடமாடும் நிலையில் தான் இருந்தார்). அவருடன் யார் வந்தார் என்றால் அவர் மட்டும் தான். எங்கள் வீட்டில் யாரெல்லாம் இருந்தோம் என்றால் நான் மட்டும் தான். என் கணவர் இருந்தாரா என்றால் இல்லை, கடைக்கு போய்விட்டார். அன்றைய தினமே 1ம் பிரதிவாதி பணம் கொடுத்ததாக சொல்லும் விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். நான் 1ம் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும், எனவே நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஓம்./–K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.